1972 சனவரி 29]

குறிப்பிலே, அந்த இடத்தில் இருக்கும் பள்ளியில் வெறும் 27 மாணவர்கள்தான் இருப்பதாகக் கூறுகிருர்கள். அதிலும் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் அந்த மாணவர்கள் விடுதி அவசியமில்லை என்று அவர்கள் விளக்கம் தந்திருக்கிருர்கள். எனவே அதை வைத்து அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காகித தொழிற்சாலைகள்

* 135 **வின.—திரு. கு அ. பொம்மன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் காகித தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) இல்லை

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இம்மாவட்டம் தொழிற்சாலையில் மிகமிகப் பின்தங்கியிருப்பதாலும், அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய கச்சாப் பொருள்கள் நிறைய இருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஓரளவிற்குத் தீர்க்கும் முறையிலேயும் இங்கு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் புனராலோசனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: இதற்குத் தேவையான மூலப் பொருள் அதிக அளவிற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது.

* 136 **வின.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில்லில் மாநில அரசு எவ்வளவு ரூபாய் முதலீடு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ் நாடு அரசாங்கம் சேஷசாயி பேப்பர் மில்லில் நேரடியாக முதலீடு எதுவும் செய்ய வில்லை. ஆனல் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்த பேப்பர் மில்லில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்க நிறுவனத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறேம். அந்தக் கம்பெனியை ஆரம்பித்தவர்கள்